முருகப்பெருமான் துணை

# மகான் கணநாதர் அருளிய துல்லிய ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**05.01.2024**, வெள்ளிக்கிழமை

1. தருமராஜனே அரங்கா வாழ்க
தன்னார்வத் தொண்டர்படைகளை
பேருலகமெங்கிலும் படைத்தருள
பிரணவக் குடில் அமைத்த அரங்கனே
2. அரங்கனே உன்பெருமை கூறி
அகிலமதில் சோபகிருது சிலை திங்கள்
வரங்களென இருபான்திகதி புகர்வாரம்
(சோபகிருது வருடம் மார்கழி மாதம் 20 ம் நாள், 05.01.2024, வெள்ளிக்கிழமை)
வழங்குவேன் துல்லிய ஆசி
3. ஆசிதனை கணநாதர் யானும்
அருளுவேன் உலக நலம்பெற
ஆசிதந்து அரங்கமகான் காட்டும்
ஆற்றல் மிக்க சன்மார்க்க வழிதனை
4. வழிதனை உலகமக்கள் ஏற்று
வல்லமைதா என வேண்டிவர
அழியாமை தரும் தீட்சை பலம்
அனைவரும் ஏற்று வணங்கிட
5. வணங்கிட யாவர்க்கும் ஞானபலம்
வரமாகக் கிட்டி பேருலகினில்
இணங்கி ஞானிகள் ஆசியுடனே
யாவர்க்கும் சித்திகள் கண்டடைய
6. அடையவே ஆற்றல் பெருகும்
அறம் வழி வாழுகின்ற வண்ணம்
தடையற வாழ்க்கை நெறிமுறைகள்
தவராஜன் ஆசிபட சிறந்தோங்கும்

7. ஓங்கவே கலிமாயை அல்லல்
ஓங்கார நாதபலம் கூடிடவே
பங்கமுற்று விலகி அகலும்
பாருலகில் அமைதி பாதுகாப்புக் கூடும்
8. கூடவே தருமபலம் பெருகும்படி
குருவரங்கன் சீடர் மக்கள்
நாடெங்கிலும் அன்னதான சேவை
நன்மை காணும்படி செய்துவர
9. வருகவே கிளைகள் பலகோடி
வளர்ந்து வையகம் தன்னில்
தரும சாலைகளே நீதி மான்களை
தரணிக்கு தந்திடும் வண்ணம்
10. வண்ணம் சக்தி கூடியே
வருங்காலம் ஞான ஆட்சி
மண்ணுலகம் கண்டடைய நேரும்
மக்களை வதைக்கும் மனிதர்கள் ஆட்சி
11. ஆட்சி முடிவுற்று சடுதியில்
ஆறுமுகனை தலைவனாக ஏற்ற
ஆட்சியாம் ஞானிகள் இணைந்த
ஆளுமையாக நல்லாட்சி மலரும்
துல்லிய ஆசி முற்றே

—சுபம்—